Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 242/2025 PW-1**

Name : பாஸ்கர்
Father / Husband name : பழனி
Village : சித்தேரி
Age : 36
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 01.07.2026

A1, 2 present. Defence counsel present. Witness identified by Roshanai PS HC 2735 Tr.Palanivel.

**முதல் விசாரணை**

நான் தற்போது டைல்ஸ்போடும் வேலை செய்கிறேன். சாட்சி ரவிந்திரன், சின்னக்குழந்தை, முருகதாஸ் ஆகியோர்களை எனக்கு தெரியும், எனது ஊர்க்காரர்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், எனது ஊர்க்காரர்கள். 11.04.2025 அன்று எங்கள் ஊரில் முருகன் கோவிலில் பங்குனி உத்திரம் திருவிழா சாமி ஊர்வலம் இரவு 07.00 - 07.30 மணியளவில் சேட்டு என்பவரின் வீட்டின் அருகே இருந்தபோது எதிரிகள் இருவரும் மதுபோதையில் பிரச்சனை செய்து, எதிரி குபேந்திரன் என்னை தேவிடியா பையா என்று அசிங்கமாக திட்டி, கையால் எனது தோள்பட்டை, முதுகில் அடித்தார்கள். ரவீந்திரன் ஏன் சண்டை போடுகிறீர்கள் என்று கேட்டபோது அவரையும் எதிரிகள் கையால் அடித்தார்கள். அருகிலிருந்த சின்னக்குழந்தை, முருகதாஸ் ஆகியோர்கள் ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டபோது எதிரி குபேந்திரன் தடியால் முருகாதாசின் தோள்பட்டையில் அடித்தார். எதிரிகள் இருவரும் சின்னக்குழந்தையை தடி மற்றும் கல்லால் அடித்தார்கள். அதில் சின்னக்குழந்தைக்கு தலையில் அடிப்பட்டது. பின்னர் அங்கிருந்த ஊர்க்காரர்கள் சண்டையை மறித்துவிட்டார்கள். அடிப்பட்ட சின்னக்குழந்தை, முருகதாஸ் ஆகியோர்களை ஊர்க்காரர்கள் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள், பின்னர் அங்கிருந்து

முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். சம்பவத்தன்று இரவு 10, 11 மணியளவில் ரோசணை காவல் நிலையம் சென்றோம், அங்கு ஆய்வாளர், உதவி ஆய்வாளர் இல்லாததால் மறுநாள் காலையில் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை நான் எழுதினேன். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புகாரில் 1வது எதிரி குபேந்திரன் கையால் எனது தோள்பட்டை, முதுகில் அடித்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி தற்போது நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் என்னை அடித்ததை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் இல்லை, எனக்குக்காயம் ஏற்படவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எத்தனை புகார் கொடுத்தேன் என்றால் 3, 4 புகார் இருக்கும். பிறகு மைனஸ் செய்து அ.சா.ஆ. 1 புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரிகளை நாங்கள் அடித்ததாக என்மீது வழக்கு எண் சிசி 381/2025 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சாமி ஊர்வலம் என்பது கொக்கிப்போட்டு ( அலகு குத்திக்கொண்டு ) நேர்த்திக்கடன் செலுத்தும் திருவிழா என்றால் சரிதான். அலகு குத்திக்கொண்டு சுமார் 20 நபர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். சுமார் 100 நபர்கள் உடன் வருவார்கள் என்றால் சரிதான். காயம்பட்டதாக சொல்லும் சின்னக்குழந்தை, முருகதாஸ் ஆகியோர்களை நர்ன மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை, யார் அழைத்து வந்தார்கள் என்று தெரியாது, ஆனால் மருத்துவமனையில் அவர்களை பார்த்தேன். அவர்களை மருத்துவமனையில் பார்த்தபிறகு காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். அப்போது காவல் நிலையத்தில் பாரா போலிசார் இருந்தார்களா

என்றால் இருந்தார்கள். சம்பவத்தன்று இரவு நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. கொடுத்ததாக சொல்லும் 4 புகார்களும் சம்பவத்திற்கு மறுநாள் கொடுத்தது என்றால் சரிதான். எதிரிகள் கூட்டம் அதிகமாக உள்ளது, சாமியை வேகமாக கோவிலுக்கு அழைத்துச்செல்லுங்கள் என்று சொன்னார்கள், நாங்கள் தான் சேர்ந்து எதிரிகளை அடித்தோம் என்றால் சரியல்ல. எதிரிகள் கொடுத்த புகாரிலிருந்து தப்பிக்க 4 முறை மாற்றி எழுதி இந்த பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அடித்ததாக சொல்லும் தடி, கல் ஆகியவற்றை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 242/2025        PW-2**

Name : ரவீந்திரன்
Father / Husband name : சின்னப்பன்
Village : சித்தேரிபட்டு
Age : 45
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 01.07.2026

A1, 2 present. Defence counsel present. Witness identified by Roshanai PS HC 2735 Tr.Palanivel.

**முதல் விசாரணை**

நான் தற்போது கொத்தனார் வேலை செய்கிறேன். அ.சா.1 பாஸ்கரன் என்பவரை தெரியும், உறவினர். சாட்சிகள் சின்னக்குழந்தை, முருகதாஸ் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 2025 ம் வருடம் மாதம் நினைவில்லை, 25 ம் தேதி இரவு சுமார் 07.30 மணியளவில் எங்கள் ஊரில் சாமி ஊர்வலம் வந்தது. அதில் நானும் பாஸ்கரும் அந்த திருவிழாவை எடுத்து நடத்தினோம். சாமி ஊர்வலம் சேட்டு வீட்டின் அருகே வரும்போது எதிரிகள் மதுபோதையில் அ.சா. 1 யிடம் அவரின் அண்ணி வைத்திருப்பதாக தவறாக பேசினார். அப்போது நான் சென்று சாமி ஊர்வலம் என்பதால் காலையில் பேசிக்கொள்ளலாம் என சொன்னபோது எதிரி குமரவேல் கல்லை எடுத்துக்கொண்டு வந்தார். அப்போது சின்னக்குழந்தை, முருகதாஸ் ஏன் கல்லை எடுத்துக்கொண்டு வருகிறாய் என்று கேட்டபோது எதிரி குபேந்திரன் தடியால் முருகதாசின் தோள்பட்டையில் அடித்துவிட்டார். எதிரி குமரவேல் கல்லால் சின்னக்குழந்தையின் தலையில் அடித்துவிட்டார். அதில் அவருக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. அடிப்பட்ட சின்னக்குழந்தையும், அவரின் மகன் பிரவின்குமாரையும் நான் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். சாட்சி முருகதாஸ் கைவலிப்பதால் அவரரும் மருத்துவமனைக்கு வந்தார்.

மருத்துவமனையில் முருகாதாசிற்கும் ஸ்கேன் எடுத்து கை உடைந்துவிட்டதாக சொன்னார். பின்னர் நான் அசா.1 க்கு போன் செய்து புகார் கொடுக்குமாறு சொன்னேன். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள், நடந்ததை சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கோவில் திருவிழாவில் நானும் உறுப்பினர் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. அ.சா.1 யிடம் அவரின் அண்ணி வைத்திருப்பதாக தவறாக பேசினார் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. பிரவின்குமாருக்கு அடிப்பட்டு இருந்ததா என்றால் அவருக்கு அடி எதுவும் இல்லை, அவர் மருத்துவமனைக்கு உடன் வந்தார். சின்னக்குழந்தையும், எனது மகனும் சுயநினைவோடு இருந்தார்களா என்றால் எனது மகன் சுயநினைவோடு இருந்தார், சின்னக்குழந்தைக்கு தலையில் அடிப்பட்டு இருந்ததால் மயக்கத்தில் இருந்தார். எதிரிகள் அடித்ததாக சொல்லும் கல், தடியை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. அலகு குத்திக்கொண்டு சுமார் 50 நபர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். அ.சா.1 யிடம் அவரின் அண்ணி வைத்திருப்பதாக தவறாக பேசினார் என்று சொல்வது தவறு, அது உண்மையாக இருந்திருந்தால் புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியிருப்பேன், அ.சா.1 அதுகுறித்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை நாங்கள் அடித்ததாக என்மீது வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் கூட்டம் அதிகமாக உள்ளது, சாமியை வேகமாக கோவிலுக்கு அழைத்துச்செல்லுங்கள் என்று சொன்னார்கள், நாங்கள் தான் சேர்ந்து எதிரிகளை

அடித்தோம் என்றால் சரியல்ல. அந்த வழக்கிலிருந்து அ.சா1 ஐ வைத்து இந்த பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் நீதிமன்றத்தில் முன்னுக்கு பின் முரணமாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 242/2025 PW-3**

Name : சின்னக்குழந்தை
Father / Husband name : ராமு
Village : சித்தேரிபட்டு
Age : 45
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 01.07.2026

A1, 2 present. Defence counsel present. Witness identified by Roshanai PS HC 2735 Tr.Palanivel.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 பாஸ்கரன் என்பவரை தெரியும், உறவினர். அ.சா.2 ரவீந்திரன் எனது மச்சினன். சாட்சி முருகதாஸ் எனது மச்சினன் மகன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். போனவரும் பங்குனி உத்தரத்தின்போது இரவு சுமார் 7 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது சண்டை என்று கேள்விபட்டு ராஜி வீட்டிற்கு எதிரில் சென்றேன். அங்கு எதிரிகள் இருவரும் பாஸ்கர் மற்றும் ரவீந்திரனை அடிக்க சென்றபோது நான் சண்டையை மறிக்கச்சென்றேன். அப்போது எதிரிகள் இருவரும் கல்லால் எனது தலையில் அடித்தார்கள். எனது தலை மற்றும் மூக்கில் இரத்தம் வந்தது. அடிப்பட்ட என்னை எனது கணவர் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு சென்றேன். பின்னர் சம்பவம் சம்மந்தமாக மறுநாள் ரோசணை காவல் நிலைய போலிசார் காவல் நிலையத்தில் என்னை விசாரித்தார்கள். இந்த சண்டையில் வேறு யாருக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

யார் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார் என்றால் எனது கணவர். மருத்துவரிடம் நடந்த விவரத்தை யார் சொன்னது என்றால் நானும் எனது

கணவரும் சொன்னோம். போலிசார் விசாரணையில் எதிரிகள் இருவரும் கல்லால் எனது தலையில் அடித்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். திண்டிவனம் அரசு மருத்துவமனையிலிருந்து எங்கு சென்றேன் என்றால் முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றால் 3 நாட்கள் இருந்தேன். நான் முண்டியம்பாக்கத்திலிருந்தபோது போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் மறுநாள் வந்து விசாரித்தார்கள். பாஸ்கர், ரவீந்திரன் ஆகியோர்கள் மீது எதிரிடை வழக்கு உள்ளது தெரியுமா என்றால் தெரியாது. என்னை அடித்ததாக சொல்லும் கல்லை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. பாஸ்கர், ரவீந்திரன் ஆகியோர்கள் எதிரிகளை தாக்கியதிலிருந்து தப்பிக்க பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவரிடம் 15 நபர்கள் அடித்ததாகவும், நீதிமன்ற சாட்சியத்தில் 2 நபர்கள் அடித்ததாகவும் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3 நாட்கள் முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணத்தை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. 3நாட்கள் முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. மருத்துவ ஆவணம் இருந்திருந்தால் போலிசாரிடம் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. திண்டிவனம் மருத்துவமனையிலிருந்து மருத்துவர் என்னை மேல்சிகிச்சைக்கு பரிந்துரை செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு தலையில் ஏற்பட்டக்காயம் கீழே விழுந்ததால் தான் ஏற்பட்டது, எதிரிகள் தாக்கியதால் அல்ல என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 242/2025 PW-4**

Name : முருகதாஸ்
Father / Husband name : ரவீந்திரன்
Village : சித்தேரிபட்டு
Age : 17

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 01.07.2026

A1, 2 present. Defence counsel present. Witness identified by Roshanai PS HC 2735 Tr.Palanivel.

**முதல் நிலைக்கேள்வி**

1. நான் என்ன படிக்கிறேன் என்றால் பள்ளி முடித்து மயிலம் Engineering கல்லூரியில் படிக்கிறேன்.

2. என்ன படிக்கிறேன் என்றால் பொறியியல் கல்லுரில் மெக்கானிக் முதலாமாண்டு படிக்கிறேன்.

3. இன்று எதற்காக நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் தெரியும், திருவிழாவில் எனது கையில் அடிப்பட்டது சம்மந்தமாக சொல்ல வந்துள்ளேன்.

( சாட்சி கேள்விகளை புரிந்துகொண்டு பதில் அளிக்கிறார் என்று மனநிரைவு அடைந்து சாட்சி பதிவு செய்யப்படுகிறது )

**முதல் விசாரணை**

நான் மயிலம் Engineering கல்லூரியில் படிக்கிறேன். அ.சா.1 பாஸ்கரன் எனது அண்ணன். அ.சா.2 ரவீந்திரன் எனது அப்பா. அ.சா.3 சின்னக்குழந்தை எனது பெரியம்மா. ஆஜா் எதிரிகளை எனக்கு தெரியும், எனது ஊர்க்காரர்கள். கடந்த 11.04.2025 அன்று பங்குனி உத்தர திருவிழாவின்போது மாலை சுமார் 07.30 மணியவில் தேருடன் மேட்டுத்தெருவிலுள்ள சேகர் வீட்டின் அருகே இருந்தபோது ஆஜா் எதிரிகள் குடித்துவிட்டு வந்து அப்பா மற்றும் அண்ணன் பாஸ்கரனிடம் தகாத வார்த்தையால் திட்டி, சண்டை போட்டார்கள். நான் கேட்கச்சென்றபோது எதிரி குபேந்திரன் தடியால் எனது இடது தோள்பட்டையில்டி அடித்துவிட்டார். எதிரிகள் இருவரும் கல்லால் எனது பெரிம்மாவின் தலையில் அடித்துவிட்டார்கள்.

அடிப்பட்ட நானும் எனது பெரிம்மாவும் அண்ணன் பிரவினுடன் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். எனது இடது கை தோள்பட்டையில் எலும்பு உடைந்துவிட்டது. மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு ஒருநாள் சிகிச்சையிலிருந்தேன். சம்பவம் சம்மந்தமாக அ.சா1 புகார் கொடுத்தார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை திண்டிவனம் அரசு மருத்துவமனையிலிருக்கும்போது விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மருத்துவரிடம் எனக்கு எப்படி காயம் ஏற்பட்டது, எந்த ஆயுதத்தால் ஏற்பட்டது என்று நான் சொன்னேன் என்றால் சரிதான். மருத்துவரிடம் தடியால் எனது தோள்பட்டையில் அடித்துவிட்டதாக சொன்னேனா என்றால் சொன்னேன். திண்டிவனம் அரசு மருத்துவமனையில் எவ்வளவு நேரம் சிகிச்சையிலிருந்தேன் என்றால் இரவு 10 மணிக்குமேல் முண்டியம்பாக்கம் அனுப்பிவிட்டார்கள். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் 1 நாள் சிகிச்சையிலிருந்ததற்காக ஆவணம் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னை அடித்த தடி அல்லது கல்லை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. திண்டிவனம் அரசு மருத்துவமனையிலிருக்கும்போது போலிசார் விசாரித்ததை தவிர விசாரிக்கவில்லை என்றால் சரிதான், கட்டுப்போட்டுக்கொண்டு காவல் நிலையம் சென்றேன். எதிரிகளை அடித்துவிட்டதாக எனது அப்பா மற்றும் பாஸ்கர் மீது வழக்கு நிலுவையில் உள்ளது தெரியுமா என்றால் தெரியும். எனது அப்பா மற்றும் பாஸ்கர் எதிரிகளை அடிக்கும்போது நான் ஓடிவந்தபோது கீழே விழுந்து எனக்கு அடிப்பட்டது என்றால் சரியல்ல. நாங்களே கீழே விழுந்து அடிப்பட்டு எனது அப்பா, பாஸ்கரன் தூண்டுதலின்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.